தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஞு கார்த்திகை மீ 18உ (3-12-'22.) | ப. 31.

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 323
   (உதவி பத்திராதிபர்)
2. துருக்கிச் சமாதான நடவடிக்கைகள் ... 324
3. உண்மை யறிவு ... 325
   (B. ராமஸ்வாமி)
4. தொழிற் சாலைக் கேடுகள் ... 326
5. சோதிடப்புலி சோணசலம் ... 326
6. கிருஷ்ண குமாரி ... 328
7. புயற் காற்று ... 329
   (V. நாராயணையர், M.A., M.L.)

தமிழ் உலகு

(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்

தமிழ் வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

'தமிழ் உலகு' காரியாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்,

மைலாப்பூர், சென்னை.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல, ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்,
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

உம்மிடி

ராமய்யசெட்டி குருசாமிசெட்டி கம்பெனி

நம்பிக்கையான நகை வர்த்தகர்கள்
25, சைனுபஜார் ரோட், மதராஸ்

ఉమ్మిడి రామయ్య శెట్టి, గురుసామి శెట్టి
కంపెనీ
నగల వర్తకులు
25, చైనా బజారు రోడ్డు, మదరాసు.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமிமுதலியார் எழுதியது

		ரூ.	அ.
இந்திரா பாய்	...	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்			
சுந்தர சிங்	...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை			
அம்புஜாக்ஷி	...	2	0

வி. நாராயணன் கம்பெனி,
4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

லோகோபகாரி.

ஆசிரியர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை.

நல்ல வாரப் பத்திரிகையை விரும்பு கிறீர்களா?
புத்துயிர் பெற்றுப் பொற்படைய விரும்புகிறீர்களா?
இன்பமான பொழுது போக்கை விரும்பு கிறீர்களா?
சிறந்த செந்தமிழ்ப் பாடல்களை விரும்பு கிறீர்களா?
தேசத்தில் நடக்கும் செய்திகளை அறிய விரும்பு கிறீர்களா?
வேதாந்தம் படிக்க விரும்புகிறீர்களா?
உலக விநோதங்களை அறிய விரும்பு கிறீர்களா?

அவ்வாருனல், சென்னையிலிருந்து சென்ற இருபது வருஷ காலமாக வியாழன் தோறும் வெளிவரும் லோகோபகாரிக்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள்.

வருஷ சந்தா ரூபாய் நாலே—மாதிரிப் பிரதி இனம்.

காரியஸ்தர்,
"லோகோபகாரி," சென்னை.

பணம் திருப்பி கொடுக்கலாம்

ஒரு வருஷம் எங்கள் நிபந்தனையின்படி படிப்பவர்கள் இங்கிலீஷ் பாஷையில் குறைந்தபக்ஷம் 4-வது பாரம் வரையுள்ள படிப்பாவது அடையலாம்.

ஜோலிக்கு இடையூறில்லாமல் தங்கள் வீட்டிலிருந்தே கற்றுக்கொள்ளலாம்.

எப்பொழுதும் முன் பணமாக
வருஷசந்தா ரூ 10—8—0

புஸ்தகங்கள் ஒரே மொத்தமாக கொடுக்க மாட்டோம். எங்கள் ஸ்தாபனத்தில் ஒரு வருஷத்திய படிப்பை யடைந்தவர்களுக்கும், 4-வது பாரம்வரை படித்தவர்களுக்கும் 3வருஷம் கொண்டு பல விதத்திலும் இந்தியன் யூனிவர்ஸிடி B.A. பரீக்ஷைக்கு சமமான லண்டன் மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்கு சேருவதற்கு நாங்கள் மாணுக்கர்களை தயார் செய்கிறோம்.

ஏராளமான கம்மிஷனுக்கு வேலைசெய்ய ஏஜெண்டுகள் தேவை.

E. C. School,
Trivandrum.

இந்த பேப்பரின் பெயர் சொல்லிவரக் கூடிய ஆர்டர்களுக்கு சந்தா தொகையில் அணு எட்டு குறைவு செய்யப்படும்.

மகாத்மா காந்தியின் சிறைச்சாலை அனுபவங்கள்

தென்னுபிரிக்காவிலே நம்மவருக்காகப் போராடி சிறைச்சாலையை தேசாபிமான தவச் சாலையாகக்கொண்டு அரும்பாடு பட்டும் உள்ளஞ் சலியாது சாத்வீக எதிர்ப்பையே சாதனமாகக்கொண்டு, தேசாபிமான தத்துவங்களை மகாத்மா விளக்கிக் கூறியிருக்கும் அரிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. எளிய இனிய நடையில் அவராலே கூறப்பட்டவாறு எழுதப்பெற்றது.

விலை ரூ 0—8—0.

மகாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம்

சுயராஜ்யம் என்பதை நன்கு விளக்கி ஆதியில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல், நம் தேசத்தில் "நாகரீகம் நாகரீகம்" என்று தோன்றிப் பற்பலரையும் மயக்கி வருத்தும் விஷய விவரங்கள் நிர்மல சிந்தையுடன் விளக்கப்பட்டுள்ளன. படிப்போர் மன மயக்கம் நீங்கி, தெளிவு உண்டாகி, தேசாபிமான உதயம் உண்டாகும்.

விலை ரூ 0—8—0.

கணேஷ் கம்பெனி,

39, தம்பு செட்டி தெரு, சென்னை

உலக நடை

(உதவி பத்திராதிபர்)

இந்தியா சுய ராஜ்யம் பெறத் தகுந்த நிலையிலிருக்கின்றதா வென்றும், இச்சமயம் ஆங்கில ஸைன்னியங்களை இந் நாட்டை விட்டு வெளியேற்றிவிட்டால், உள்நாட்டுக் கலகங்களை யடக்கவும் வெளி நாட்டுப் படையெடுப்பைத் தடுக்கவும் இந்தியர்களுக்கு சக்தியிருக்கிறதா வென்றும் ஒரு சிலர் வினவுகின்றனர். இந்திய அரசாங்கச் சீர்திருத்தச் சட்டம் ஓர் நூற்றாண்டு வரையில் அமுல் நடந்தால், பிறகு தற்கால ஸ்திதிக்கு மாறாக இருக்குமென இவர்கள் நினைக்கின்றனர்போலும். அடிமைகளாவதற்கு இச் சீர்திருத்தங்கள் வெகுவாய் உதவி புரியு மென்றிவர்கள் கண்டுகொண்டாரில்லை. தேசப் பாதுகாப்புக்கு வேண்டும் சேனையை தயார் செய்வது அதிக காலம் பிடிக்குமோ. இராணுவ வீரர்கள் நாட்டில் கிடைப்பது அரிதோ. யாது காரணத்தால் நம்மை இவ்விதம் இகழ்ன்றனரோ நாம் அறியக்கிகூடவில்லை.

❀

அரசாங்கச் செலவைக் குறைக்க வழி தேட வந்திருக்கும் லார்ட் இன்ச்கேப்புக்கு ஐரோப்பிய சங்கத்தார் கூறும் புத்திமதி விநோதமாயிருக்கின்றது. பலர் இத்தேசத்தில் வரிகொடா நிகழ்ச்சியில் சேர்ந்து அரசாங்க வருமானத்தைக் குறைத்திருக்கின்றனராம். சீர்திருத்தங்களால் அதிகச் செலவேற்பட்டிருக்கிறதாம். வரி வசூலிப்போருக்குத் துணைபுரிய போலீஸார்களையும் ஸைன்னியங்களையும் அதிகப்படுத்தினால் வரி முழுமையும் வசூல் செய்துவிடலாமாம். செலவைக் குறைப்பது இக் காலத்திற் குரியதல்லவாம். ஸைன்னியச் செலவைக் குறைத்து விட்டால் அரசாங்க முறைகளுக்கே இடையூறுகள் ஏற்பட்டு விடுமென்றும் பலவாறாக இச்சங்கம் புகட்டுகின்றது. குறைந்த செலவில் காரியங்களை நிர்வகிக்கும் அரசாங்கமே மேலானதென ராஜதந்திர நிபுணர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். அவ்வாறில்லாது செலவை அதிகப்படுத்தும் அரசாங்கமே நம்தேசத்துக்குப் பொருத்தமானதென்று கூக்குரலிடும் இச்சங்கத்தின் கொட்டத்தை யடக்கும் காலம் எப்போது வருமோ?

❀

மலையாளக் கலக ஸம்பவங்களின் உண்மைக் காரணங்களை அறியத் தேர்ந்தெடுத்த காங்கிரஸ் கமிட்டி விசாரணைக்கு விரோதமாய் சில விரோதிகள், ஒத்துழையாதாராலேயே கலகங்கள் உண்டாயின வென்றும், குற்றவாளிகளே நியாயாதிபதிகளாக விசாரணை நடத்துகிறார்கள் என்றும், குறை கூறியதுபோல், சில சீக்கியர்கள், சிரோமணி குருத்வார பிரபந்தக்கமிட்டி சீக்கிய ஜாதியார் எல்லோரையும் ஆதரிக்கவில்லை யென்றும், அகாலியர்களை மட்டுமே ஆதரிப்பதென்றும், தற்போது சொல்லப்படும் அகாலியர்கள் இரண்டு வருஷங்களுக்கு முன்தான் உதித்தவர்களென்றும், பலமே அவர்களுடைய ஆயுதமாகக் கொண்டு சில கோயில்களை கைவசமாக்கி யிருக்கிறார்களென்றும், பழைய வழிகளையும் ஆசாரங்களையும் பின்பற்றி நடக்கும் சீக்கியர் வேறு பலர் இருக்கிறார்கள் என்றும்வெளியிட்டு அகாலியர்களுடைய பலத்தை யடக்க அரசாங்க உதவியை நாடுகிறார்கள்.

❀

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் சட்டஸபை பிரவேச விஷயமாய் யாதொரு தீர்மானமும் செய்யவில்லை. வாக்குவாதம அவ்வளவு தீவிரமாய் நடைபெற்றது. கடைசியில் இவ்விஷயத்தை கயையில் கூடும் காங்கிரஸே தீர்மானிப்பதென விடப்பட்டது. கதர் உடுப்பது தேகத்தையும் மனதையும் புனிதமாக்குவதென்றாலும், சுயராஜ்யம் இதால் ஸித்திக்காதென்றும், நம்முடைய ஒத்துழையாப் போராட்டத்தை நடத்தவேண்டுமென்றால் சட்டஸபை பிரவேசம் வேண்டுமென்றும், தான் அதிகாரத்திற்கோ பட்டத்திற்கோ ஆசைகொண்டு மொழிபவனல்லன் என்றும், கிலாபத் மகா நாட்டின் முன்பாக ஸ்ரீமான் ஸி. ஆர். தாஸ் அவர்கள் உரைக்க லாயினர். கதர் உடுப்பது நம்மைப் புனிதமாக்குவதோடு அன்னிய நாட்டடிமைத்தனத்திலிருந்து நம்மை மீட்பதற்கு உதவிபுரியு மோர் ஆயுதமே. சிறிது சிறிதாக நம் அடிமைத்தனத்தை நீக்கிவிட்டு நாம் சுயேச்சை பெற்று சுயராஜ்யம் கோரும் நமக்கு சட்டஸபை புகுதல் எதற்கோ?

❀

இங்கிலாந்தில் வேலையற்று பரிதபிக்கும் வேலையாளர்களுக்கு வேலை கொடுக்க மந்திரிகள் பல வழிகளில் முயன்று வருகிறார்கள். பிழைப்புக்குத் திண்டாட்ட மேற்பட்டால் தேச அமைதி நிலவாதென உணர்ந்து, ரெயில்வே அதிகாரிகளுடனும் ஸ்தல சுய ஆட்சி நிர்வாகிகளுடனும் மந்திரிகள் கலந்து யோசித்து, ஐந்து கோடி பவுன் கடன் வாங்கி கட்டட நிர்மாண வேலைகளைத் துவங்க முற் பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் பிரஜைகளுடைய க்ஷேமத்தைக் கருத வேண்டியது அரசாங்கத்தின் நன்மைக்கேயாம். வேலையாளர்களைக் காண்பதற்கு இணங்காதிருந்த முதன் மந்திரி இவ்விஷயத்தை கவலையுடன் கவனிப்பது அவருடைய நற்புத்தியை விளக்குகிறது. முக்கியமான விஷயத்தில் பிடிவாதம் பிடிப்பது தகாதன்றோ!

❀

கிரீஸ் தேசத்தில் பழைய மந்திரிகளைக்" குற்றம் சாட்டி அவர்களைக் கொலை செய்திருக்கிற அதிகாரிகளுடைய குரூரச் செயலை நோக்கும் போது, நாம் அவர்களைக் கண்டனம் செய்யவே வேண்டியிருக்கிறது. இந்நாட்களில் கொலைகள் நியாயமில்லாமல் அபரிமித மாகவே நடக்கின்றன. இச் செயலை அங்கீகரிக்காமல் ஏதன்ஸி லிருந்த லிண்ட்லீ யென்ற பிரிடிஷ் பிரதிநிதி அவரிடமிருந்து விலகி, கொடுமையை லார்ட் கர்ஸானிடம் தெரிவிக்கப் போகிறார். லண்டனிலும் பாரிஸிலும் யாவரும் இக்கொடும் செயல்களை இகழ்ந்து கிரீஸ் அதிகாரிகளிடம் வெறுப்படைந் திருக்கிறார்கள்.

❀

இராஜ்யக்கடன் தொகை இங்கிலாந்தில் அதிகமாயிருப்பதைக் குறைப்பதா லுண்டாகும் பயனை வெகுவாய் ஆதரித்து அதற்கு, லேபர் கட்சி யினர் கூறும் உபாயங்களைச் சற்று

நோக்குவாம். கடனுக்கு வட்டி கொடுத்து வரு வதைக் காட்டிலும் முதலாளிகள் வைத்திருக் கும் திரவியத்தில் அவரவருக்கு ஏற்றவாறு ஒரு பாகத்தைக் கொடுத்துவிட்டு இக்கடனைத்தீர்த்து விடுவதென்ற உபாயத்தை ஆராயுங்கால், கடனை முதலாளிகள் பங்கிட்டுக் கொள்வதென்றே ஏற் படுகிறது. இது எவ்விதம் தேசத்தின் நிலையை சீர்தூக்குவதென்று புலப்படவில்லை. இப்போது வருஷாவருஷம் வரிகளாகக் கொடுக்கும் முதலாளி கள், கடன்களை பங்கிட்டுக்கொண்டால் அதற்கு வட்டியாக செலுத்திவருவார்கள். இம்முறை யால் தீங்கைத் தவிர வேறு சௌகரியம் ஒன்று மிராது. கடனைப்பங்கிடுவதில் நியாயம் நடத்து வது இயலாது. லேபர் கட்சியினர் முதலாளிகள் மேல் அசூயை கொண்டு இம்முறையை ஆதரிக்கி றார்களே யொழிய நலம் பெறுவது ஆகாது.

புதிதாக ஓர் இராஜ்யம் உலகில் தோன்றிவரு கிறது. இதற்கு சம்ரக்ஷணை பலம் யாதென்றால் பல தேசங்களுடைய பரஸ்பரப் பொறுமையும் சச்சரவும். இவ்விராஜ்யத்திற்குப்பெயர் ஸர்வதேச ஸங்கம். இதற்கு யார் அரசரென விசாரிப்போ மானால் ராஜதந்திரம் என்று பெயர் புனைந்து அநி யாயத்தை செலுத்தக் கருதுகிற ஓர் தேசத்து அதிகாரியே யாகும். பலம் குன்றி வேறு வழி யில்லாமல் துரும்பையாவது பிடித்து கரையடை ய எண்ணங்கொள்ளும் சிறு ராஜ்யங்களே இப் புதிய ராஜ்யத்தின் பிரஜைகள். இவ்விராஜ்ய நீதியைப்பற்றி யாதாயினும் சொல்லவேண்டுமோ. வேண்டுவதில்லை. இவ்விராஜ்யத்திற்குத் தனி யான நாடுகள் கொடுத்துவிடுவதற்கு வேண்டிய சூழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. எந்நாடு களில் கலகமே குடிகொண்டிருக்க அதிகாரி கருது கிறாரோ, அந்நாடுகள் இவ்விராஜ்யத்திற்கு உரித் தாகும்.

மஹாத்மா காந்தி இங்கிலாந்தில் படித்துத் தேர் ந்த ஓர் பாரிஸ்டராவர். அவருக்கு அளித்த பாரிஸ் டர் பட்டத்தை இப்போது அந் நியாயக் கலாசாலை யதிகாரிகள் பிடுங்கி விட்டார்களாம். தேசஸே வையை ஓர் பெரியகுற்றமாகக் கொண்டு பட்டத் தை ரத்து செய்த நியாய கலா சாலையில் கற் பிக்கும் நியாயம் எத்தகைமையது எனக் கூறவே ண்டுவதில்லை. பொதுஜனங்களுக்கு இட வேண் டிய நியாயத்தை பெரிதெனக் கருதி யுழைத்த மஹானை தங்கள் கூட்டத்தில் ஒருவராக ஏற்றுக் கொள்ளாததின் இழிவை என்னென்று சொல் வது. இப்பட்டம் வைத்துக் காப்பாற்றி மஹாத் மாகாந்தி அடைய வேண்டியது உலகத்தில் யாது மில்லை யானாலும், இவ்வாறு நிகழும் என்று மஹா த்மா கருதவில்லை. அச்சபையினர் இவ்விழிவான வேலைக் கிணங்குவாரெனத் தோன்றினால், முன் னமேயே ரத்து செய்து விடும்படி மஹாத்மா வே ண்டிக் கொண்டிருப்பார். இச்செய்கையின் பய னை மஹாத்மா நம் மனதில் இப்பட்டமாகிற கள ங்கத்தைக் களைந்த சுத்தராக விளக்குகிறார்.

துருக்கிச் சமாதான நடவடிக்கைகள்

இதுவரையில் லோஸேனில் கூடியிருக்கும் வல் லரசுகள் செய்திருக்கும் நடவடிக்கைகளின் போக் கை கவனிக்கும் போது, நீடித்த ஸமாதானம் ஏற்படுவதற்கு வல்லரசுகள் பாடு படுவதாகத் தோன்றவில்லை. துருக்கியர்கள் தங்கள் ராஜ்ய நிர்வாக விஷயத்தில் அந்நிய தேசத்தார் தலையிடு வதை வெறுக்கிறார்கள். மற்றைய சில்லரைத் தகவல்களை எவ்வித மாகவும் தீர்த்துக்கொள்ள இசைந்திருக்கிறார்கள். பிரிடிஷாரோ, இடாலி யையும், பிரான்ஸையும் தம் நோக்கங்களுக்கு இணங்கச் செய்து, ஐரோப்பியர்களுக்கு சில விசேஷ உரிமைகள் துருக்கியிலிருக்க வேண்டு மென்ற நோக்கத்துடனே, நடவடிக்கைகளை நட த்தி வருகிறார்கள். இவ்வித நோக்க மிருந்தால் சமாதானம் எவ்வாறு நிறைவேறும்?

உலகத்தில் மேல்நாட்டார் கீழ்நாட்டார் என்ற பாகுபாடு நிகழ்ந்து வருவதை எவரும் அறிவார். ஆசியர்களை இகழ்ந்து கூறும் பகுதியினர் பலர் இருப்பதும், இவ்விழிவு தென்னாபிரிக்கா ஆஸ்டி ரேலியா முதலிய நாடுகளில் பல அநியாயங்களுக்கு ஹேதுவாயிருப்பதும் நன்கு உணர்ந்ததே. இவ் விஷயம் துருக்கியர் மனதிலும் இந்தியர்கள் மன திலும் நிலை பெற்றிருப்பது குறிக்கத் தக்கதே. இதை யனுஸரித்து துருக்கி ஆப்கானிஸ்தானத் துடன் செய்திருக்கும் உடன் படிக்கை ஓர் அத்தாக்ஷியாகும். இவ்விரண்டு நாடுகளும் மேல் நாட்டாரினது அநியாயச் செய்கைகளை எதிர்க்க ஏகோபித்து யத்னம் செய்ய உடன் படிக்கை செய்து கொண்டிருக்கிறது. இவ்விஷயங்களில் வல் லரசுகள் காட்டும் மனோ நிலைக்கேற்ற வாறு சமாதான நடவடிக்கைகள் பயன்படும்.

அமெரிகா தேசத்தார் சமாதான விஷயங்களில் அபிப்பிராயம் சொல்வதைத் தவிர்த்து நடவடிக் கைகளில் கலந்துகொள்ள நோக்கங் கொள்ள வில்லையாயினும், தனியாக துருக்கியுடன் சமா தான உடன்படிக்கை செய்துகொள்ளப் போகி றார்கள். ருஷியர் சமாதான விஷயமான எல்லா நடவடிக்கைகளிலும் தாங்கள் கலந்துகொள்ள வேண்டுமென அறிவித்திருக்கிறார்கள். ஜலஸந்தி காவலை துருக்கியிடமே ஒப்புவித்து விடுவது நல மென ருஷியர் தெரிவித்துள்ளார். பல்கேரியா வுக்கு கடற்கரை வரவேண்டிய வசதி யிரு க்கும்படி நிலபாகம் சிறிது விடவேண்டுமென்ற கோரிக்கைக்கு துருக்கியருள்பட யாவரும் இண ங்கினாலும், அந்நிலபாகத்தை யார் காப்பதென்ற விஷயமே விவாதத்திலிருக்கின்றது.

உண்மை யறிவு

(B. ராமஸ்வாமி)

'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின், மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்' எனவே, திக்பாலகர்களின் அம்சமென்று கருதப்படும் அரசனைக்காட்டிலும் மாசறக்கற்றோன் எத்தகையச் சிறப்பு வாய்ந்தவனாகிறான். மாசு எது; கல்வியின் லக்ஷணம் எது; கற்றதனாலாய பயன் யாது; என்று உற்றுநோக்கின், ராக த்வேஷாதி மலங்கள் நிறைந்த நாம், நம்மைப் படைத்துக் காத்து அழிக்கும் பகவான் ஒருவன் உளனென்றும் 'அன்பே யவ'னென்றும், 'அவனன்றி ஓரணுவு மசையா'தென்றும், நாமெல்லோரும் பகவானின் ஸொத்து, என்றும், எள்ளிலுறை யெண்ணைபோல் உயிர்க்குயிராயிருக்கும் பரம் பொருளின் மாயா விலாஸமான காரிய காரணப் பிரபஞ்சமும் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபமான ஜகத்தும் அதிருஷ்ட திருஷ்ட நஷ்டமென்றும், சிரவண மனன தியானங்களினால் அஞ்ஞான ஸம்சய விபரீதங்கள் விலகி, சித்தசுத்தி உண்டாகி, வைராக்கியம் கைகூட, ஸம்ஸாரமாகிற ஜன்ம கர்மப் பிரவாகத்திலிருந்து தப்புவதற்கு பகவானின் பாதாரவிந்த ஸேவையைத்தவிர வேறெதுவும் சரியான மார்க்கமில்லை யென்று தெளிந்து கொள்வதே யாம்.

நிற்க, உண்ண வேண்டும், உறங்கவேண்டும், பிரஜோற்பத்தி செய்யவேண்டும்; நமக்கு மற்ற வீண் விசாரணை எதற்கு? கண்டதே காக்ஷி, கொண்டதே கோலமென்றும் வறுமையால் பீடிக்கும் நம்மைச் சார்ந்தவர்கள் பட்டினியிருக்க, பொருளில்லா நடைப்பிணமாய்க் கருதப்படும் நிலையில் நாமுமிருக்க, அப்ஸரஸூக்கு ஸமமான மனையாளையும், கண்ணின் கருமணி போன்ற குழந்தைகளையும் கஷ்டத்திற்குள்ளாக்கி விட்டு, ஞானம், வைராக்கியம், மோக்ஷம் எதுவும் வேண்டாம்; என்று பொருளீட்டலையே நம் முக்கிய லக்ஷ்யமாகக் கொண்டு பணத்திற் கடிமைகளாகக் கிடந்துழலுகிறோம். உலகத்தில் ஊழ்வினைப்பயனால் ஒரு சிலரே தனவான்களா யிருக்கிறார்கள்; சிலர் இலேசாய்ப் பொருளை சேமித்து விடுகிறார்கள்; மற்றுஞ் சிலர் எவ்வளவு முயன்றும் தரித்திர சிகாமணிகளாகவே விளங்குகிறார்கள். இவைகளுக்குக் காரணம் 'ஊழிற்பெரு வலியாவுள மற்றொன்று—சூழினுந்தான் முந்துறும்.' 'வல்லான் வகுத்த வகையலால்' நம் செயலாலாவதொன்றில்லை. இன்னும் நம் பெண்டு பிள்ளைகளும் மற்றுமுள்ள சுற்றத்தாரும் நோய்வாய்ப்படவும், அவர்கள் காலகதி யடையுங் காலம் வர, அதை நாம் என்ன முயன்றும் தடுக்க முடியாமலும் தத்தளிக்கிறோம். இவ்வாறு நம்முடைய ஸங்கல்பங்களெல்லாம் வீணாகவே, காமம், (நாம் கோரின வஸ்து கிடைக்காவிடத்து) குரோதம், லோபம், மோஹம் (மௌட்டியம்), மதம், மாத்ஸர்யம் (பிறர் ஸுகிக்கப்பொறாமை) இத்யாதி குணங்கள் நம்மைப் பீடிக்கத் தலைப்படுகின்றன. இப்படியே வாழ்நாளெல்லாம் வீணாக்கி, பிராணப் பிரயாண சமயம் வர, காலனுக்குட்படுகிறோம்.

இந்த நிலையில் புத்திசாலியானவன் அறிய வேண்டியது யாதெனில்: கல்வி கரை யில; 'கற்பவர் நாள் சில; மெல்ல நினைக்கிற பிணி பல;' என, மனுஷிய ஜன்மமான மஹாதனம் கிடைத்திருக்க, வீடு நெருப்புப் பற்றி யெரிய அதை அவிக்கவேண்டி வீணாய் அங்கு மிங்கும் ஓடித் திரிபவன் போல் ஆத்மவிசாரம் செய்யாது கிருபணனாய் (ஞானமில்லாதவனாய்) இருக்கிறோமே! அந்திம தசையில் நல்ல ஸ்மிருதி வரவேண்டுமானால், இப்பொழுது முதலே மெய்ப்பொருளைக் காணவேண்டுமென்று பாடுபடுகிறான்.

மேலும் நாம் மண், பெண், பொன் இவைகளில் எது சாசுவதம்; எது நம்மை பிரகாசம் பண்ணக் கூடியது; எது ஸுகஹேது; என்று கவனித்தால் இவைகள் ஒன்றினிலும் பிரயோஜனமில்லை யென்று தெரிந்து கொள்கிறோம். மந்தாந்தகாரத்தில் கயிற்றைப்பார்த்து ஸர்ப்பமென்றும், இருட்டில் ஸ்தம்பத்தை மனிதனெனவும், நல்ல வெளிச்சத்தில் கிளிஞ்சலை வெள்ளி யென்றும் பிரமிக்கும் ஒருவன் விசாரிக்கத் தலைப்பட்டால் நிஜஸ்வரூபம் எப்படி விளங்குகிறதோ, அதுபோல் நித்தியமெது அநித்தியமெது வென்று விவேகத்தாலறிந்து, ஸுகப்பிராந்தியாயுள்ளதைத் தள்ளி, நித்திய ஸுகத்தை நாடுவது உண்மை யறிவு எனத் தெளிகிறோம்.

இதற்கு ஒரே வழிதானிருக்கிறது. எப்படியெனில், வழிப்போக்கனொருவன் நடுக் கோடையில் காட்டு வழியே சென்று கொண்டிருக்க, வெய்யிலின் கொடுமை தாங்காது தபிக்கும் ஸமயம், ஒரு ஆலமரத்தையும் அதனருகே ஓர் நீர்ச்சுனையையும் கண்டால், எப்படி சுனையில் நீரருந்தி நிழலில் இளைப்பாறி தன் தாபத்தைத் தீர்த்துக் கொள்ள நினைப்பானோ அதுபோல் குணசீல விசிஷ்டனாயும் ஸௌம்யனாயும் உள்ள குருவை நாம் விநயத்தோடு ஆசிரயித்து, ஸம்பிரதாயத்தோடு சாஸ்திரார்த்தத்தை கிரஹித்து ஞானத்திற்கு பஹிரங்க ஸாதனமான நித்திய கர்மானுஷ்டானங்களையும், அந்தரங்க ஸாதனமான மனோநிக்ரஹம், இந்திரிய நிக்ரஹம் முதலான குணங்களையும் தீவிர பக்தியோடும் வைராக்யத்தோடும் உத்ஸாகத்தோடும் அப்பியாசம் பண்ண ஈசுவரப்பிரஸாதம் கை கூடி, நெருப்பிலிட்ட மூளை எப்படி யழிந்து விடுமோ அப்படியாக நம்முடைய கர்மங்கள் க்ஷயித்து சாசுவத பதவி நமக்கு கூடுமென்பதில் சந்தேகமில்லை. பொதுவாக ஸத்ஸங்கத்தில் நம்மைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இப்படி நித்திய முக்தர்களாவதற்கு யாருக்கு அதிகாரமுண்டு? ஆகாசத்தைப் போல் ஸர்வ வியாபியாய் யாவருக்கும் பொதுவாயிருக்கும் ஈசுவரன் ஜாதியென்றும் மதமென்றும், ஆணென்றும் பெண்ணென்றும், ஸ்நேகிதனென்றும் விரோதியென்றும், மனுஷியனென்றும் பசு பக்ஷியாதி ஜந்துக்களென்றும், வித்தியாசம் பார்க்கிறானோவெனில், இல்லை. தன் கருணையினால் எல்லோரையும் ஆட்கொள்ளுகிறானென்றறிகிறோம். அசுர குலத்தில் பிறந்த பிரஹ்லாதனையும், ஐந்து வயதுக் குழந்தையான துருவனையும், க்ஷத்திரிய ஸ்திரீயான துரௌபதியையும், பிராமணஸ்திரீயான அஹல்யையும், த்வேஷ புத்தியுடனிருந்த கம்ஸனையும் த்ரியக்கான கஜேந்திரனையும் இன்னும் அநேக நாயன்மார் ஆழ்வார்களையும் காப்பாற்றியதாகக் கேள்விப் படுகிறோம். பக்த பராதீனனென்று உலகத்தோ ரறிய உரலில் கட்டுப்பட்டான். பரம பக்தியோடு ஸமர்ப்பிக்கும் ஒரு சருகோ, புஷ்பமோ, பழமோ, ஒரு கை தீர்த்தமானாலும் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறான். ஆகவே, நாமறிந்து கொள்ள வேண்டியது யாது? நம்முடைய தேக தாரணைக்கு வேண்டிய வஸ்துக்கள் மிகச் சிலவேயென்றும் அடக்கம், ஒழுக்கம், பகவதாராதனம் இவைகளே நமக்கு வேண்டியவையென்றும், 'துன்பமுற வரினுஞ் செய்க, துணி

வாற்றி—யின்பம் பயக்கும் வினை' என்று துன்பங்களும் இடையூறுகளும் தேகமுள்ளவரை ஸஹஜமென்று தெளிந்து, நல்வினைகளை ஈசுவரார்ப்பண புத்தியோடு செய்து கொண்டும், குணங்களுக்கும் அவஸ்தைகளுக்கும், பஞ்சகோசங்களுக்கும், அப்பாற்பட்ட பகவானை யடைவதற்கு முயலுவோமாக.

இத்தகைய துக்கத்தை நிவர்த்திக்கும் கல்வி, உயர்தரக்கல்விகற்றேமென யுக்தி வாதமும் அஹங்கார வாதமும் செய்து கொண்டு உண்மை . யின்னதென்று தெளியாது ஏமாந்து இ.றுமாந்திருக்கும் மாந்தரிடம் அடைய முடியுமாவென்று நாம் யோஜித்து, உண்மைக் கல்வி இன்னதென்று இப்பொழுதாவது அறிந்து கொள்வோம்.

தொழிற் சாலைக் கேடுகள்

உழுதுண்டு வாழும் வாழ்வே நிகரில்லா வாழ்வெனப் போற்றி வந்த வழக்கத்தைப் புறக்கணித்து நம் வேலையாளர்கள் இப்போது பட்டணங்களில் கூடி தொழிற் சாலைகளில் கூலிவேலைக்கமர்ந்து படும் துன்பங்கள் அநேகம். தேக செளக்கியத்திற்கு வேண்டும் நல்ல காற்று, குடி நீர், உணவு, வாஸ வசதிகள் முதலிய விலைபெற்ற செல்வத்தை யிழந்து, பல வியாதிகளுக்கு ஆளாகி, தங்களையும் தங்கள் சந்ததிகளையும் எல்லையில்லா துன்பக்கடலில் ஆழ்த்தி வருந்துகிறார்கள். பல கவலைகளுக்கு உட்பட்ட அரசனுடைய நிலைமைக்கு மேலாகக் கொண்டாடப்பட்டு வந்த ஏழையின் பெருமை இவர்களிடம் காணேம். சந்தோஷமில்லாமல், வேறு வேலை செய்யத்திறமை யற்று, முதலாளிகளின் கைகளிலகப்பட்டு, பலதுராசாரங்களைக் கைப்பற்றி பரிதபிக்கும் இவர்களின் நிலையை அதிகமாய்ச் சொல்லத் தேவையில்லை.

இவ்வேலையாளர்களை உழைக்கச்செய்து முதலாளிகள் தங்கள் திரவிய லாபத்தையே பெரிதாகப் பாராட்டி உயிரும் உடலும் தற்சமயமே பிரியாதிருப்பதற்கு மட்டும் தேவையான கூலியைக்கொடுத்து மிகுந்ததை தாங்கள் கவர்ந்து கொள்ளுகிறார்கள். குழந்தைகளையும் ஸ்திரீகளையும் காலைமுதல் மாலைவரை தொழிற் சாலையில் வேலைக்கமர்த்தி வரும் வேலையாளருக்கு இல்லற வின்பங்கள் ஏது. அடிமைத்தொழில் இதைவிட வேறெங்கு காணவேண்டும். ஐரோப்பிய நாகரிகத்தின் கேடுகளெல்லாம் நம் தேசத்தில் நிலை பெறுகின்றனவே யொழிய இக்கேடுகளை ஒருவாறாக சீர்திருத்தும் முறைகள் ஒன்றும் வழங்கவில்லை. வேலையாளர்களுக்கு ஆரம்பக் கல்வி வசதிகளும் சுகாதார செளகரியங்களும், வைத்திய சிகித்ஸையும், வயது சென்றவர்களுக்கு ஜீவனபென்ஷனும் தொழிற்சாலை யந்திர ஆபத்தால் தாக்குண்டவர்களுக்கு நஷ்ட ஈடும் இவைகளையெல்லாம் அளிக்கவேண்டியது முதலாளிகளின் கடமையன்றோ. இவைகளையெல்லாம் கொடுக்கச் சக்தியற்ற தொழில்கள் தேசத்தில் வளர்க்கக் கூடாததே. இவ்வளவு செளகரியங்களுக்கும் வேண்டிய செலவை செய்த பின்னர் மிகுந்திருக்கும் லாபத்தை முதலாளிகள் எடுத்துக் கொள்ளுவதில் ஒருவருக்கும் ஆக்ஷேபணை யிராது. ஒரு கைத்தொழிலைச் செய்வதற்கென்று தங்கள் திரவியத்தை உபயோகித்தவர்கள் அத்தொழிலில் வேலைக் கமர்த்தியவர்களின் உரிமைகளை நியாயமாக கவனித்த பிறகு தான் தங்கள் லாபத்தை அடைதல் வேண்டும். இவ்விந்தியாவில் இப்போது வேலையாளர்கள் வருந்துவது அரசாங்கத்தார் இவர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய விதிகளை இயற்றாததாலே எனச் சொல்லத் தேவையில்லை. இப்போது தொழிற்சாலையபாயங்களால் தாக்குண்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் விஷயமாய் ஓர் மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதை 1924ஞூ முதல் அமுலுக்குக் கொண்டுவர நோக்கங் கொண்டிருக்கிறார்கள். இதனால் மேற்கூறிய செளகரியங்கள் எல்லாம் கை கூடவில்லை. நஷ்ட ஈடு சிற்சில விடங்களில் முதலாளிகளே தாங்களாக தயவுடன் கொடுத்து வந்தார்கள். ஓர் உத்தியோகஸ்தரை ஏற்படுத்தி அவர் அபாய ஸம்பவங்களை நேரில் பார்த்து விசாரித்து, அச்சம்பவங்களுக்கு ஏற்றவாறு நஷ்ட ஈடு கொடுக்கத் தீர்ப்புசெய்யும்படி இம்மசோதா விதியிட்டிருக்கிறது. மற்ற செளகரியங்களை பாதுகாக்க வேண்டிய சட்டங்களை பிரஜைகளுக்கு நியாயம் வழங்க நோக்கங்கொண்ட எந்த அரசாங்கத்தாரும் இயற்ற வேண்டியது முக்கியமே.

சோதிடப்புலி சோணசலம்

நேற்று ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் கடற்கரைக்குச் செல்ல வெண்ணி வீட்டிற்கு வெளியில் வந்தவுடன், எதிரில் கொஞ்ச தூரத்தில் காஷாயதாரி ஒருவன் வருவது போலிருந்தது. புறப்படுவதே ராகுகாலத்தில், அதிலும் ஆண்டி எதிர்ப்படுகிறானே யென்று அய்யமுற்று நின்றேன். அப்பொழுது அருகில் வந்த ஆண்டி சோணசலமெனத்தெரிந்தது. நானும், "வா அப்பா சோணசலம்; ஏது நெடு நாளாய் ஊரிலில்லை போலிருக்கிறது. எப்பொழுது திரும்பி பட்டணம் வந்தாய்."

" அது சமாசாரம் தெரியாதா, உன்னை முன்னற் பார்த்தது முதல் பல இடங்களிலலைந்து வருந்தி நேற்று காலையில் இவ்வூருக்கு வந்தேன். வந்த உடன் வாசலில் மோட்டார் வந்து கோபாலரத்தினமய்யர் அவர்கள் டில்லியிலிருந்து இராஜப் பிரதிநிதியைப் பார்த்து திரும்பி வந்து விட்டதாகவும், என்னை கையோடு அழைத்து வரும்படிச் சொன்னதாகவும் சொல்லி அழைத்து போனார்கள். அங்கு போன பொழுது நடந்த விசேஷம் வெகு ஆச்சரிய மானது. உனக்கு தெரியாதே?"

எனக்கு நீ சொன்னாலல்லவோ தெரியும். சொல்லாமலே தெரிந்து கொள்ள நானும் என்ன சோதிடப் புலியா? அங்கு ஏதாவது பெரும் புளுகாய் உரைத்திருப்பாய் என்று நினைக்கிறேன்.

நீயும் கொஞ்சம் சோதிடத்தில் பழகிவருகிறாய் போலிருக்கிறது. ஆனால் உண்மையறிந்துரைக்கும், திறமை வரவில்லை. நான் அய்யரவர்கள் வீட்டிற்குச் சென்றபொழுது அவரிடத்தில் இளமைப் பருவமுள்ள ஒருவர் ஏதோ தன் விஷயமாய் வெகு விநயத்தோடு பேசிக்கொண்டிருந்தார். நான்போய் அருகில் உட்கார்ந்த உடன் அய்யரவர்கள் என்னைப் பார்த்து புன்னகையோடு, 'என்ன இவரைத் தெரியுமா உமக்கு' என்று கேட்டார்.

என்னுடைய திறமை யறிந்த நீங்களும் என்ன இப்படிக் கேட்கிறீர்கள். இவரை முன்னர் பார்த்ததில்லை யானலும், எம் மாந்தர்களின் இயல்பு மறிந்த எனக்கு இவரைத் தெரியாது என்று எப்படி எண்ணுகிறீர்கள். இப்பொழுது இவர் தங்களைக் கேட்கவந்த காரியமின்னதென்பதும்

அது தாங்கள் சொல்லியபடி நடவாதென்பதும் எனக்குத் தோன்றுகிறது.

அப்படியா, நல்லதிருக்கட்டும். இவர் ஆங்கில படிப்பில் அதிக தேர்ச்சியடைந்தவர். இவரது தொழிலிம்மாதிரியாயிருக்கும் என்று உமது சாஸ்திரத்தில் சொல்லியிருந்தால் சொல்லும், பார்ப்போம்.

நல்லது கேளும். இவரது ஜாதகத்திலுள்ள கிரக நிலைகளுக் கேற்றபடி சனி நாடியில் கூறியிருப்பதை :—

"மயிருறுதகரிற் சேர்மதியவன்றன்னோடும்
செயிருறு சனிதானும் சேர்ந்திடம் தொழிலாகில்
பயிலுறு தமிழிற் கோர் பத்திரிகையே தான்
இயலுறவெழுதிப் பேரெய்துவனிது திண்ணம்."

சோதிடரே, இன்று உமக்கு திடம் குறைந்துவிட்டதென நினைக்கிறேன். இவர் இங்கிலீஷ் பாஷையில் தேர்ச்சி யடைந்தவரென்று சொன்னேன். அதை கவனிக்கவில்லை. அதல்லா திவர் தமிழ் படித்தவரல்லர். ஆகவே, இவர் தமிழ்ப் பத்திரிகை யெழுதிப்பெயரெய்துவரென்று சொல்லிய சாஸ்திரம் பொய்யாகாம லிருக்குமா? அதன்றியும் இவருக்கு கல்கத்தாவிலிருக்கும் கலாசாலையில் தலைமை உபாத்தியாயராக இருக்கவேண்டுமென்று உத்திரவு கடிதம் வந்திருக்கிறது. அங்கு போவதற்கு வேண்டிய சிபார்சுக் காகிதங்கள் வாங்க என்னிடம் வந்திருக்கிறார். இவைகளை யறியாத நீர் தவறாக உரைத்துவிட்டதால் உமது சனிநாடிக்கே கவுரவம் குறைந்து விடுமென நினைக்கின்றேன்.

ஆகா! அய்யாவர்கள் எனது ஆற்றலும் நாடியின் பலமும் தெரிந்திருந்தும் இவ்வாறு கூறியது ஆலோசனைக் குறைவென நினைக்கிறேன். எல்லாம் காலத்தால் வருவதன்றோ? அக்காலத்தை யளக்கும் கதிரவன் புதல்வனாகிய சனி நிலையை நாடி, காலகாலனாகிய காளகண்டனால் கூறப்பட்ட சாஸ்திர மன்றோ நான் கூறுவது. அதுவும் பொய்யாகுமா? சாமான்யமாய் சொல்லாமல் 'எய்துவனிது திண்ணம்' என்றும், "பத்திரிகையே தான்" என்றும் சாஸ்திரம் கூறியிருப்பதால் இது ஒருபொழுதும் பிசகாகாது. நடந்தே தீரும். இவர் கல்கத்தாவுக்கு போகும்படி தாங்கள் எவ்வளவு உபதேசித்தாலும் போவதில்லை. போனாலும் உடனே திரும்பி வந்து இங்கு தமிழ் பத்திரிகை நடத்துவரென்பதில் எனக்கு ஐயமில்லை. இது தவறினால் நான் தாடியைக் களைந்து மணம் புரிந்து இல்வாழ்க்கையில் இருந்து விடுகிறேன்.

அடாடா! என்ன கஷ்டமான சபதம் செய்தீர். கல்யாணம் செய்து கொள்வது கசப்பாயிருக்கிறதோ. நல்லதாய் விட்டது.

தாங்களுக்கு கல்லியாணம் கசக்கவில்லை யென்பது இரண்டு தாரங்கள் மணந்ததினாலேயே தெரியவருகிறது. என்னை போன்றவர்களுக்கு தாலிகட்டிய பெண்டிர் காலிலிட்ட விலங்கு போலாவர். மணத்தினும் மாணமே நலமெனன நினைப்பது என் மனம். அதனால் தான் அப்படிச் சொன்னேன். நம் நாட்டிலுள்ள அறிஞர்களெல்லாம் மங்கையரால் வருங் கேடுகளை வெகுவா யெடுத்துரைத்து அதிலிருந்தும் விடுபட வழி தேடித் திரிந்தார்களென்பது தங்களுக்குத் தெரியாதா! உமா பதியருளால் ஊடல் தணிந்த பரவையாரின் நலம் பருகிய நாவலூராரும் மடந்தையரால் வரும் கேட்டைக் குறித்துச் சொல்லுகிறார்.

"மையாடிய குழலிந் பொதிம்தியென்னுமோர் நுதலாள்
கய்யாடிய நகிலாள் கடைக்கண்ணென்னு மோர்காலன்
உய்யாவகையுட்றறத்தனியுழல் வேனுமங்கொரு நாள்
அய்யாரனை யடைந்தே னருள்பெற்றே னினிப் பிறவேன்."

இதென்ன சுந்திரமூர்த்திகள் பதிகங்களிலிதைக் கேட்டதில்லையே.

இது செல்லரித்துவிட்ட பதிகங்களிலடங்கியது என்று நான் சொல்லியவுடன், அய்யரவர்கள் இளையவரை நோக்கி, பாட்ராச்சாரி, நீர் உடனே கல்கத்தாவுக்குப் போகவேண்டும். இச் சோதிடர் சொல்வதை பொய்யாக்க வேண்டுமென்றார். அதைக்கேட்ட அவரும் சரியெனச் சென்றார். ஆனாலும் நான் சொல்லும் சாஸ்திரம் பொய்யாகாதென்பது என் தீர்மானம்.

அப்பா சோணாசலம், உன்னதிருஷ்டமே யதிருஷ்டம்; நேற்றைய தினம் வந்த தமிழ் பத்திரிகையில் பத்திராதிபர் பாட்ராச்சாரியர் என்று போடப்பட்டிருக்கிறது. நானும் இதென்ன விபரீதமாயிருக்கிறதே யென்று நினைத்தேன். நீ சொல்லிய பொய்யை மெய்யெனக் கருதி அவர் செய்து விட்டார் போலும்.

அப்பா உனக்கு இதெல்லாம் அதிருஷ்டமாகத் தோன்றுகிறதே யொழிய எனக்கு எல்லாம் திருஷ்டமே. பொய்யென்பதாக நீ நினைப்பதெல்லாம் உலகத்தவருக்கு மெய்யே யன்றோ? நீயும் கேட்டதில்லையா நாயனார் சொல்லியதை :—

"பொய்யலாதுலக மில்லை புனிதமாம்
மெய்யலாது அவனிலா வாங்கு."

உலகமே பொய்யென்று சொல்லும் உனக்கு எது தான் மெய்யாகும். "பொய்யே யென்னின் பொய்யே யாகும், பொய்யிலா மெய்யே யென்னின் மெய்யே யாகும்." இதன்றி உனக்கும் அவைகளால் பயனுண்டாகுமா?

அப்பா சோணாசலம் எப்பொழுது குறள் பாட ஆரம்பித்தாய். ஏதப்பா, நீ ஒருவரையும் விடுவதில்லை போலிருக்கிறதே? இப்பொழுது சொல்லிய குறள் எங்கிருக்கிறது.

என்ன நீ தமிழறிந்தவனென்றிருந்தேன். அது சரியல்ல வென்று தோன்றுகிறது. முப்பாலும் பாடிய வள்ளுவரும் வீட்டுப்பாலைப் பாடாது விட்டிருப்பாரா? இதை யேன் கவனிக்கவில்லை. அவர் பாடியிருப்பதைப் புலவர்க ளறியாவிட்டால் அது அவர்களது குற்றமோ நாயனாருடையதோ. அப்பாடல்கள் எனக்குப் புலியாருளால் புலப்பட்டால் அது என் பிசகா? அதனால் என்னை கற்பனை செய்பவன் என்று சொல்வது தகுமா? இவைகளையெல்லாம் சற்றும் கவனிக்காது நீ சொல்வதழகா?

நான் சொல்லியது பிசகு தான். உன் பொய் உலக முழுவதையும் உண்ட மாலின் மணிவயிற்றைபும் உள்ளடக்கிக் கொள்ளும் தன்மையது என்றறிந்திருந்தும் அதைப் பற்றி யுன்னிடத்தில் பேசியது குற்றமாகும். நிசமென்பது கலந்திருந்தாலன்றோ பொய்யென்பது ஏற்படும். எல்லாமொரு விதமாயிருந்தால் பொய்யென்றும் மெய்யென்றும் இரண்டு வித்தியாசமான பொருள்களெங்கிருந்து வரும். நல்லது, நேரமாயிற்று சாப்பிடலாம் வா.

இன்றைக்கு அய்யரவர்கள் அன்பர்களுக்கு விருந்து செய்கிறார், நானங்கு அவசியம் போகவேண்டுமெனச் சொல்லிவிட்டு சோணாசலம் சென்றான். நானும் உள்ளே சென்றேன்.

கிருஷ்ண குமாரி

(நம்முடைய இப்பரதகண்டமானது தேசத்தின் அமைப்பிலும் விஸ்தீர்ணத்திலும் சீதோஷ்ண ஸ்திதியிலும் செல்வப்பெருக்கிலும் நிலவளத்திலும் எவ்விதம் இதர நாடுகளைக் காட்டிலும் முன்னேற்றங்கொண்டிருக்கின்றதோ, அவ்விதமே தன் மக்கட்களாலேயும் சிறப்புற்று விளங்கியதாக நாம் அறிகிறோம். ஐரோப்பியர்களைப்போல் ஒவ்வொரு அரசரின் ஆளுகையும் ஒவ்வொரு நூற்றாண்டின் விசேஷங்களையும் நாகரிகங்களையும் குறிப்பெடுத்துக் கூடுமட்டும் அழகாய் சித்தரித்து நாட்டின் பெருமையை தக்கவாறு பிறர் திகைத்து நோக்கும்படி பிரசுரம் செய்யும் ஊக்கத்தை நம்முன்னோர்கள் கடைப்பிடித்து எடுத்துரைத்திருப்பார்களாயின், நமதுநாடு பண்டைகாலத்தில் அடைந்த கல்வித் திறத்தையும் நற்குணங்களின் பிரகாசத்தையும் அரசர்களின் சௌரியங்களையும் அவர்கள் செய்வித்த சீர்திருத்தங்களையும் தெரிந்து, நம்நாடு தற்காலமுடைந்திருக்கும் அடிமை நிலைமையைக்கண்டு நாம் வெட்கி பரிதபித்து நிற்போம். அந்நாட்களில் நமது சகோதரிகள் தேசத்திற்காகச் செய்திருக்கும் தியாகங்களை விளக்க, அவர்களின் திவ்விய சரித்திரத்தைப்படித்து ஆனந்திக்குமாறு எடுத்துரைத்து மழுங்கி நிற்கும் நம் மனோ தைரியத்தையும் தேசாபிமானத்தையும் செழித்தோங்குமாறு செய்ய நம்மனம் தூண்டுகிறது. ஆகையால் தலைப்பில் வரையப்பட்டிருக்கும் சிறுமியின் சரித்திரத்தைசுருக்கமாக எழுதுவோம்.)

சென்ற பதினெட்டாம் நூற்றாண்டில் நமது தேசத்தின் வடபாகமுழுதும் ஒரே குழப்பமும் கலகமும் கொள்ளைகளும் நிகழ்ந்து இவைகளை யடக்கத்திறனற்ற மன்னர்களே ஆண்டு வந்தார்கள். செழுமை மிகுந்த இந்துஸ்தானத்தை அலையின்மேல் அலையாய் போர்கள் மோதிக்கொண்டேயிருந்தன. மொகலாய சக்ரவர்த்திகளில் முதன்மை பெற்ற பேபர் சக்ரவர்த்தியால் பிறப்பிக்கப்பட்டதும், அக்பர் சக்கரவர்த்தியால் செழித்தோங்கச் செய்யப்பட்டதுமான மொகலாய ராஜ்யம் அவர்கள் வம்சத்திலேயே பிறந்த அவுரங்கஸீபென்னும் பெயர்புனைந்த அரசனுடைய கவனமின்மையாலும் அற்ப குணங்களாலும் சீர்குலையத் தலைப்பட்டது. தன்முன்னோர் சேமித்துவைத்திருந்த ராஜ்ய ஸம்பத்தை நாசமாக்கினன். ஒன்றன்பின் ஒன்றாய் அநேக சிறு ராஜ்யங்கள் தன் ஸ்வதந்திரத்தை நிலைநாட்ட வாரம்பித்தது. மூன்று நூற்றாண்டுகளாய் சேர்க்கப்பட்ட ராஜ்ய ஸம்பத்தை மூன்றே நாழிகையில் நாடிர் ஷா கொள்ளை கொள்ளத்தலைப்பட்டதும், இவனைப்போல் மற்றுமுள்ள அயல் நாட்டார்கள் தங்களுக்கு அகப்பட்டவைகளைக் கவர்ந்து கொண்டார்கள். அவுரங்கசீபின் கடைசி நாட்களின் அமைதியை குலைத்த மகாராஷ்டிரர்கள் மிகுதியாய் நின்ற நாடுகளைப் பிடித்துக் கொண்டனர்.

இப்படிப்பட்ட சீர்குலைந்த நாளில் ஸிந்தியா வம்சத்தவர்கள் ஒருவர்பின் ஒருவராக மீவார் தேசத்தை யுத்தகளமாகவே செய்யலானார்கள். ஸிந்தியாவும் ஹோல்காரும் தாங்கள் போரில் அடைந்த திரவிய நஷ்டத்தை மீவாரின் தலைவனிடமிருந்து வசூல் செய்து அவன் மடியில் கை வைப்பவராயினர். சில தலைமுறைகளாய் ஆளத்திறமையற்ற இளமைப்பருவம் வாய்ந்த அரசர்களால் மீவார் ஓர் சக்தியற்ற குழவிபோலாயிற்று. பீஜம் சிங் என்றுபெயர் கொண்ட ராணாவும், வயதில் எட்டாமாண்டு முடியுமுன்னரே தனது தமையன் இறக்க, ராஜ்யத்தில் முடிசூட்டப்பெற்றான். மகா பராக்கிரம சாலியான எவனும் தன் நாட்டை நிலைநிறுத்த முடியாமல் தத்தளிக்கும் அந்நாளில் பீஜம்சிங் எம்மாத்திரம். வெகுகாலம் வரையில் அவன் தாய் அவனுக்காக அரசாண்டு வந்தாள். பிறகு அவள் மந்திரிகளின் கையில் அகப்பட்டு அவர்களின் சொற்களுக்கு ஓர் அடிமை போலாயினள். சொண்டாலத், சுக்தாலத் என்றழைக்கப்பட்ட இரண்டு தலைவர்கள் ராணாவை பெயருக்கு மாத்திரம் வைத்துவிட்டு ஆள முயன்றார்கள். தாயான இராணியானவள் சுக்தாலத் கையில் சிக்கி அவன் உதவியை வேண்டி நின்றனள். இது தான் முதல் முதல் ராஜ்யத்தின் கேட்டை விருத்தி செய்தது. சொண்டாலத், சுக்தாலத் இருவரும் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டி சச்சரவு செய்தது ராணா ஸிந்தியாவை துணைக்கழைக்கச் செய்தது.

ஸிந்தியாவின் இராணுவத்தலைவனான அம்பாஜி என்பவன் எட்டுவருஷங்களாக மீவாரை பல துன்பங்களுக்கிரையாக்கினன். எவ்வளவு அற்பனாயும் கேடுவிளைப்போனாயு மிருப்பினும் அம்பாஜி ராணாவின் சக்தியற்ற தன்மையால் அபகரிக்கப்பட்ட சில நாடுகளை அவைகளின் தலைநகருடன் சேர்த்து ராஜ்யத்தை பலப்படுத்தினான். இவைகளால் ஸிந்தியா மீவாரை தனக்குக் கடமைப்பட்ட ராஜ்யமாய் நினைத்து, தான் அயல் நாடுகளின் மீது படையெடுக்கும்போதெல்லாம் தன் இராணுவத்தை சேர்த்து வைக்குமிடமாய் மீவாரைச் செய்து கொண்டான். இதனால் உற்ற துன்பங்கள் பல. ராணாவுக்கு அநேக சமயங்களில் தன் ஸ்திரீகளின் ஆபரணங்களையும் விற்று ஸிந்தியாவுக்கும் ஹோல்காருக்கும் பணம் செலுத்த வேண்டிய தாயிற்று. ஆனால் இந்தராஜ்யத்தில் விலையற்ற ஆபரணம் மட்டும் ராணாவின் புத்திரியாய்ப் பிறந்து கிருஷ்ண குமாரி என்று பெயர் புனைந்த ஸ்திரீ ரத்னமாய் விளங்கலாயிற்று. இவ்வளவு ஆபத்திலும் இடுக்கண்களிலும் நமது ராஜகுமாரி ரோஜாபுஷ்பம் போன்ற நறு மணத்துடன் அன்றலர்ந்த தாமரைபோன்ற முகத்தினளாய் தன் யௌவன பருவத்தை யணுகினள். இவள் எல்லையில்லா சௌந்தரியத்தின் புகழ் காற்றைப்போல் உலகெங்கும் பரவத் தொடங்கியது. ஸிந்தியாவே இக்கட்டழகியை மணக்க விரும்பியவனாய் ராணாவுக்குத் தூது விடுத்தான். தன்ராஜ்யத்தின் துன்பங்களை பதின் மடங்கு குறைத்தற்கும் தன் பிறப்பின் பெருமையையே முன்னிட்டு அந்த மணத்திற்கு ராணா இசையவில்லை. பிறகு உதயபுரி மன்னனான ஜகத் சிங் விடுத்த தூதாகளை நல்வரவு கூறி அவனை மருமகனாய் ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டான். தூதர்கள் தங்கள் நாட்டை யடைந்து அரசனுக்குத்தெரிவிக்க, ஜகத்சிங்கன் அநேகஆடையாபரணங்களுடன் பரிவாரங்கள் புடைசூழ, ஆனந்தங்கொண்டு மணக்கோலத்துடன் மீவாரை நோக்கி புறப்பட்டான். இதனிடையே, மார்வார் ராஜாவான மான் சிங் ராணாவின் புதல்வியின் சௌந்தரியச் சிறப்பை செவியுற்று, தான் அவள் மீது காதல் உற்றிருப்பதாயும் இராணியாக்கிக் கொள்ள விரும்புவதாயும் சொல்லியனுப்பினான். இவன் ஜகத் சிங்கனைவிட மேம்பட்ட பகைவனாகக் கூடியவனாய் இருந்தான். ஸிந்தியா அரசனும் தனக் கெட்டாத பைங்கிளியை ராஜா மான்சிங்காவது அடைந்தனுபவிக்க வேண்டுமென்ற தனது எண்ணத்தை தெரிவிக்க, ராணாவோ தன் முன்னோர்களின் சொல்லுறுதியை கைபிடித்தவனாய் என்னபத்து வரினும் தன்வாக்குறுதியை மாற்ற முடியாதென்று ஒரே பிடிவாதமாய் மறுத்துவிட்டான். இதனால் மீண்டும் தனக்கு தீங்கையே தேடிக்

கொண்டான். இதற்குள் மான சிங் உதயபுரியைத் தாக்கி நிற்கும் செய்தி பரவிற்று. தன் மருமகனுகப்போகிறவன் பகைவனுக்கு இரையாகப்போகிருனே என்ற வருத்தம் ராணாவைப் பற்றியது. விந்தியா மானசிங்குக்கு உதவிபுரிய, ஆறுமாதம் சண்டைநடந்து கடைசியில் மானசிங்கே வெற்றி பெற்ருன்.

மானசிங்குக்கோ அல்லது இயமனுக்கோ ராஜகுமாரியை இரையாக்க வேண்டு மென்று விந்தியா இரக்கமின்றி சொல்லியனுப்ப, ராணா ஒன்றும் தோன்ருதவனுய் திகைக்கலானன். மந்திரியாய் இருந்த அஜிட்சிங் என்பவன் பின் வருமாறு அரசனுக்குக் கூறலாயினன்: 'உமது குலத்திற்கு உரித்தான வாக்குறுதியை உம்மாலிழக்கமுடியுமோ? விந்தியாவின் அவமதிப்பைத் தாங்குவதைவிட இவ்வளவு இடுக்கண்களுக்கும் காரணமான உமது குமாரியை ராஜ்யத்திற்காக பலி கொடுக்க வேண்டியதுதான். இருவரில் ஒருவனுக்குக் கொடுப்பினும மற்றவனுல் ராஜ்யம் தாக்குண்டு போகுமே யொழிய சமாதானம் உண்டாகப்போவதில்லை. உமது ராஜ்யமுழுதும் நசிப்பதைவிட ஒருத்தி இறப்பதே மேன்மையாகும். தன் ராஜ்யத்தைவிட பெருத்த செல்வம் அரசனுக்கு வேறு ஒன்றுமில்லை'.

இதைக்கேட்டு வெந்தணலில் விழுந்தவனைப் போல் ராஜா பரிதபித்தான். 'இதற்கோ எனது செல்வியை அழகிற்கோர் அணிகலமாய்ப் பிரமன் படைத்தான்' என்று புலம்பினுன். முடிவில் மந்திரியின் வார்த்தைக்கு இணங்கியவனுய் ராஜகுமாரியின் ரக்தத்தை சிதறச்செய்ய ஓர் ராஜபுத்ரவீரனே வேண்டுமென்று விரும்பியவனுய் தன்னைச்சார்ந்த ஓர் வீரனைக் கட்டளையிட்டான். அவனும் இதைக்கேட்டு 'இது என்னவிந்தை. இதனிலும் கொடியது இவ்வுலகில் உண்டோ. அரசனுக்குப் பித்தம் தலைக்கேறிவிட்டதா, மகுடத்தில் சூட்டவேண்டிய ரத்னத்தை உடைத் தெறிவதா? என்னுலாகாது. அதன் பொருட்டு என்னுயிரை இறப்பினும் அரசிளங்குமாரியைக் கொன்றபாதகன் என்ற பெயரைவிட்டு தப்பியவனுவே'னென்று கூக்குர லிட்டான். பிறகு அரசன் தன் மாற்ருந் தாய்க்குப் பிறந்த சகோதரனைத் தூண்ட, அவனும் உடைவாளுடன் சென்று காரியத்தை முடிக்காமல் திரும்பியவனுயினன். மாசற்ற குணங்களின் பிம்பம்போல் விளங்கும் ராஜகுமாரியைக் கண்டதும் தன் உடைவாள் நழுவ, தான் எடுதத காரியத்தை முடிக்க வல்லமை யில்லாதவனுய் வந்துவிட்டதாய்க் கூறினுன். ஹிருதயமுடைய எவனும் இக்கொடிய செயலைச் செய்யார்கள் என்று அரசன் கண்டு கொண்டான். கடைசியாய் விஷம் தயாரித்து அவளைக்கொல்லுதாய்த் தீர்மானிக்கப்பட்டது. ராஜகுமாரி, தன் தாயின் புலம்பல்களையும் வேண்டுகோளையும் செவிகொடுத்துக் கேளாதவளாய், அமிர்தம்போல் விஷத்தைக், கொடுத்தவர்கள் வெட்கித் தலைகுனிய, அருந்தினுள். 'எவ்வளவு ராஜ குமாரிகள் என்னைப்போல் ராஜ்யலக்ஷ்மியைக் காப்பாற்ற உயிர் துறந்தும் இன்னும் அநேக தியாகங்களையும் செய் திருக்கிருர்கள்; என்தாயே! நீ மட்டும் அவைகளை உணராமல் ஏன் ஓர் அற்ப பேதையைப் போல் வருந்துகிருய். போலியான இப்பூலோக வாழ்க்கையை துறக்கும் எனக்குச் சந்தோஷமாய் விடையளிப்பாய். என்னைப்பிறப்பித்த பிதாவுக்கும் இவ்விராஜ்யத்திற்கும் ஓர் சிறு உபகாரம் செய்ய என்ன தவம் நான் இயற்றியிருக்கவேண்டும்' என்று ஸமாதானம் செய்தாள். விஷம்சரியாய்த் தயாரிக்கப்படாமையாலோ அல்லது ஈசுவரனுடைய அற்புத சக்தியாலோ ஆலகால விஷத்தை உண்ட சிவனைப்போல் விஷம் அவளை ஒன்றும் செய்யவில்லை. மறுபடியும் கொடிய விஷத்தை தயாரித்துக் கொடுக்க, அதையும் மனம் தளராமல் உட்கொண்டு கட்புலங்களுக்குப் புலப்படாத அத்புத சக்தியுடன் நசிக்கும் இல்லற வாழ்க்கையை விட்டு என்றுமழியாத புகழுடன் உலகில் வழங்கிவாலானுள்.

புயற் காற்று

[V. நாராயணையர் M. A., M. L.]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நதபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனுர் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்போது புயற்காற்ருல் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்யாணகாலத்தில் தன்புருஷன் முகத்தை நன்ருய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறுஒருவர் மனைவி என்றும் அறிய, அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும், வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும்; கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டு, உறவினர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பிய பின்னர், கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய, கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்ருது கலங்கி, பிறகு கல்யாணதினத்தை ஒதுக்கிவைக்க அந்நதபாபுவை வேண்டியதும், அவர் அதற்கு கடைசியாக உடன்பட்டுவிட்டதும்; பிறகு வெளியூருக்குச் சென்றிருந்த யோகேந்திரன் வந்து கல்லியாண காரியங்கள் நடைபெருததைக் கேட்டு, கவலையுற்று, அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று, அங்கு பள்ளிக்கூடமிருந்து வந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து, இராமேசனேடு ஆத்திரத்துடன் வாதாடியதும்; பிறகு அக்ஷயனுடன் தன் வீட்டிற்கு வந்து சந்தேகங்களை வெளியிட்டு, அந்நத பாபுவையும் ஹேமநளினியையும் வருந்தச் செய்ததும், பிறகு இராமேசன் கமலாவுடன் தன்னூர் செல்லப்புறப்பட்டு அக்ஷயன் பின்தொடர்ந்ததையும், அவனை ஏமாற்றி வேறு இடம் சென்றதும், சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை.)

இராமேசனும் கமலாவும் ஏறிச்சென்ற கப்பல் உடனே குவாலுண்டாவை விட்டுப் புறப்பட்டது; முதல் வகுப்பிலாவது இரண்டாவது வகுப்பிலாவது வேறு பிரயாணிகள் இல்லை; இராமேசன் ஒரு அறையை பூராவையும் தனக்காக எடுத்துக் கொண்டு அங்கே சாமான்களை யெல்லாம் ஒழுங்காக வைத்தான்.

கமலா காலையில் பால் அருந்தியபின், கப்பல் போகும்போது பின்னோக்கிப் போவதுபோலக் காணப்பட்ட இருகரைகளையும் அங்குள்ள காக்ஷிகளையும் கப்பலறையின் ஜன்னல் வழியே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிருேம், தெரியுமா?" என்ருன் இராமேசன்.

"ஊருக்கு" என்றாள் கமலா.

இராமேசன்: "அங்கே போவது உனக்குப் பிடிக்கவில்லையல்லவா? ஆகையால் அங்கே போக வில்லை இப்பொழுது."

கமலா: "எனக்காகவா அங்கே போவதை நிறுத்தினது?"

இராமேசன்: "ஆம், உனக்காகத் தான்."

கமலா: சற்று வெட்கிய முகத்துடன், "இதென்ன இது? நான் ஏதோ பேச்சோடு பேச்சாய் சொன்னதை இப்படி பிரமாதமாக ஆக்க வேண்டியிருந்ததா? இப்படி கோபித்துக் கொள்ள லாமா?"

இராமேசனுக்கு புன் சிரிப்பு உண்டாயிற்று. "எனக்குக் கோபமே இல்லை; எனக்கும் ஊருக்குப்போக மனதில்லை."

"அப்படியானால் நாம் எங்கே போகிறோம்" என்றாள் கமலா உத்சாகமாய்.

இராமேசன்: "மேல் நாட்டிற்கு"

கமலாவின் கண்கள் விகசித்தன. ஊரைவிட்டு வெளி யேறுதவர்களுக்கு மேல்நாடு என்றதும் என்ன உத்சாகம் உண்டாகின்றது; புண்ணிய க்ஷேத்திரங்கள், நல்ல காற்றடிக்கும் ஆரோக்கிய மான பிரதேசங்கள், புதிய ஊர்கள், புதிய காக்ஷிகள், முன்பு ராஜாக்களும் சக்கரவர்த்திகளும் வசித்த அரண்மனைகள், நகரங்கள், பெரிய பெரிய கோவில்கள் முதலியவை யெல்லாம் ஆச்சரியகர மாய் இந்தியாவின் பழைய பெருமையை விளக்கு பவையாய் இருக்குமிடமல்லவா மேல் நாடு!

குதூகலத்துடன், கமலா: "நாம் எங்கெல்லாம் போகப் போகிறோம்?" என்று வினவ,

"அதை நான் இன்னும் தீர்மானிக்கவில்லை; மாங்கீர், பாட்னா, தினபுரி, பக்ஸார், காஸிபூர், காசி என்ற ஊர்கள் வழியே போகிறது இந்தக் கப்பல்; இவைகளில் ஏதாவது ஒரு ஊரில் தங்குவ தாக உத்தேசித்திருக்கிறேன்" என்றான் இரா மேசன்.

இவைகளில் சில ஊர்களின் பெயர் கமலாவுக்கு த்தெரியும்; சில அவள் கேள்விப்பட்டதுகூட இல்லை; ஆனாலும், அவன் அந்த ஊர்களைப்பற்றிச் சொன்னதும் அவள் மனம் உவந்து "ஆ! என்ன வேடிக்கையாக இருக்கும்" என்று கைகளைக் கொட்டி சந்தோஷித்தாள்.

"வேடிக்கையிருக்கட்டும், இப்போது சாப்பாட்டிற்கு வழியென்ன என்று பார்ப்போம்; கப்பல் சாப்பாடா சாப்பிடப் போகிறாய்?" என்று இரா மேசன் சொல்லவே, "அந்தச் சாப்பாட்டை யார் சாப்பிடுவது" என்றாள் கமலா.

இராமேசன்: "வேறு என்ன வழி?"

கமலா: நான் சமைக்கமாட்டேனா?

இராமேசன்: "சமைக்கத் தெரியுமோ உனக்கு?"

கமலாவால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. "என்னை யார் என்று நினைக்கிறீர்கள்? சமைக்கத் தெரியாத முழு முட்டாள் என்று நினைக்கிறீர்கள்? என் சிற்றப்பன் வீட்டில் சமையலையெல்லாம் நான் தானே செய்து கொண்டிருந்தேன்."

இராமேசன் மன்னிப்புக் கேட்பவனாய்: "நான் அப்படிக்கேட்டது தப்பு; சரி, சமையலுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம், வா" என்று வெளிச்சென்று ஒரு இரும்பு அடுப்புடன் திரும்ப வந்தான்; அதோடு மட்டுமல்ல; அந்தக் கப்பலிலே, பிராமணருக்கு அடுத்தபடியான காயஸ்தர் குலத்தைச் சேர்ந்த உமேசன் என்ற ஒரு சிறு பையன் அந்தக் கப்பலில் இருக்கக்கண்டு, அவனுக்குக் காசிக்குப் போவதற்கு கப்பல் வாடகையும் தினசரிச் சம்பளமும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அவனை இராமேசன் கமலாவுக்கு உதவிசெய்ய வேலைக்காரனாக திட்டம் செய்தான்.

"என்ன சமையல் செய்யப்போகிறாய், கமலா?"

"அரிசியும் பருப்பும் மட்டும் வைத்துக்கொண்டு என்ன சமைக்கமுடியும்; பொங்கல் வேண்டுமென்றால் செய்கிறேன்" என்றாள் கமலா.

கமலா வேண்டுமென்ற உப்பு புளி மிளகாய் இவைகளை கப்பலிலுள்ளவர்களிடமிருந்து விலைக்கு வாங்கி வந்தான் இராமேசன்; அவனுக்கு சமையல் விஷயம் ஒன்றுமே தெரியாததைப்பற்றி பரிகசித்து, கமலா "இவைகளை வைத்துக்கொண்டு என்னசெய்வது; அம்மி, குழவி இல்லாமல் எப்படி துவையல் ஆக்குவது?" என்றாள். இராமேசன் உடனே அவைகளையும் வாங்கி வரச் சென்றான். ஆனால் அம்மியும் குழவியும் கப்பலில் கிடைக்குமோ? ஒரு இரும்பு உலக்கையும் ஒரு கல்லும் கிடைத்தன; அவைகளை வாங்கி வந்தான். கமலா இவைகளைக் கொண்டு சமையல் செய்ததில்லையானாலும், வேறு கிடையாததால் எப்படியாவது அவைகளைக் கொண்டு சமாளிக்க வேண்டியிருந்தது; வேறு யாரையாவது துவையல்செய்து தரச் சொல்லட்டுமா வென்றான் இராமேசன்; கமலா அதற்கு ஒப்பவில்லை; உடனே உத்சாகமாய்துவையல் செய்து முடிப்பது என்று சாமான்களை கல்லின் மீது வைத்து இருப்புலக்கையால் இடித்தாள்; சாமான்கள் கல்லினின்று சிதறியதைக்கண்டு சிரித்துக் கொண்டே மெதுவாய் இடிக்கவே இராமேசனும் அவளுடன் சேர்ந்து சிரித்தான்.

இவ்விதமாக துவையல் இடித்து முடிந்ததும் பழைய துணி ஒன்றை எடுத்து மறைவு கட்டி பிறகு சமையலுக்கு ஆரம்பித்தாள் கமலா; அவர்கள் கல்கத்தாவிலிருந்து பக்ஷணம் வாங்கி வந்த பெரிய சட்டி சாதம் சமைக்க உதவிற்று. அதை அடுப்பில் வைத்ததும், கமலா இராமேசனைப் பார்த்து "நீங்கள் குளித்துவிட்டு வாருங்கள், அதற்குள் சமையலாகிவிடும்" என்று சொன்னாள். அப்படியே அவன் குளித்து வந்ததும் சமையலாயிருந்தது. சாப்பாட்டுத் தட்டிற்கு என்னசெய்வது?

"கப்பலிலிருந்த மகமதியரிடமிருந்து ஒரு பீங்கான்தட்டு வாங்கி வரட்டுமா" என்றான் இராமேசன்; கமலாவைத் தூக்கிப்போட்டாற் போலிருந்தது அந்தப் பேச்சு; ஹிந்து ஆசாரத்திற்கு விரோதமாக முன்னமேயே நடந்து கொண்டதாக தாழ்ந்த குரலிலே இராமேசன் கமலாவிடம் ஒப்புக் கொள்ளவே, "போனதைமாற்ற முடியாது; அது போகட்டும்; இனி நீங்கள் அப்படிச் செய்யக் கூடாது; எனக்கு நிரம்ப வ்ருத்தமாயிருக்கிறது அது" என்று சொல்லிக் கொண்டே, சாதத்தை மூடியிருந்த தட்டை எடுத்து "இன்று இதில் சாப்பிடுங்கள்; நாளைக்கு வேறு நல்லதட்டுக் கிடைக்குமா என்று பார்ப்போம்" என்றாள்.

இராமேசன் ஜலம் மொண்டு வந்து கப்பல் பலகையின் ஒரு பாகத்தைக் கழுவி அங்கே தட்டை வைத்துக் கொண்டு ஆசார விருத்தமாக நடக்கவில்லை என்று சந்தோஷத்துடன் உட்கார்ந்தான்.

இரண்டு மூன்று கபளம் சாப்பிடுமுன் அவன் "ஆகா! எவ்வளவு நன்றாயிருக்கிறது 'சமையல்" என்று சொல்லவே, "பரிகாசம் செய்யவேண்டாம்" என்று தடுத்தாள் கமலா; "நான் பரிகாசம் செய்யவில்லை, நீ சாப்பிடும்போது தெரியும் உனக்கு நான் சொல்வது உண்மை யென்று"

என்று சொல்லிக் கொண்டே தட்டிலுள்ளதை யெல்லாம் சாப்பிட்டு "இன்னும் போடு" என்றான்.

கமலா இப்பொழுது முன்னிலும் அதிகம் தட்டில் இடவே, "இதென்ன! உனக்கு வைத்துக் கொள்ளாமல் எல்லாவற்றையும் எனக்குப்போட்டு விட்டால்?"

"எனக்கு வேண்டியமட்டும் இருக்கிறது?" என்றாள் கமலா. இராமேசன் ருசியுடன் சாப்பிடுவது அவள் மனதைக் களிப்பித்தது.

"ஆமாம், நீ எதில் சாப்பிடுவாய்?" என்றான் இராமேசன்.

"ஏன், அந்தத் தட்டிலே தான்" என்றாள் கமலா; மனைவியின் உரிமையன்றோ கணவன் புசித்த பாத்திரத்தல் சாப்பிடுவது!

"கூடவே கூடாது" என்று தடுத்தான் இராமேசன். அவள் தன் மனைவியல்லவே! "ஏன் கூடாது?" என்றாள் கமலா ஆச்சரியத்துடன்.

"கூடாதென்றால் கூடாது" என்றான் இராமேசன்.

"கூடும், கூடும்; எனக்குத் தெரியும் எது கூடும் என்று. உமேசா, நீ எதில் சாப்பிடுவாய்."

"கப்பலில் கீழ்ப்புறத்தில் மிட்டாய்க் கடைக்காரன் இருக்கிறான்; அவனிடமிருந்து இலைவாங்கிக் கொண்டு வருகிறேன்" என்றான் உமேசன்.

"சரி, நீ அந்தத்தட்டிலே தான் சாப்பிடுவாய் என்றால், அதைக் கொடு நன்றாய் கழுவிக்கொண்டு வருகிறேன்" என்றான் இராமேசன்.

"இதென்னத்திற்கு" என்று முணு முணுத்தாள் கமலா.

சற்று நேரத்திற்கெல்லாம், "நீங்கள் வெற்றிலை வாங்கி வரவில்லையே; இப்பொழுது போட்டுக் கொள்ள என்ன செய்வீர்கள்?" என்று கேட்டாள் கமலா.

"ஒருவன் வெற்றிலை விற்கிறான், வாங்கி வருகிறேன்" என்று, இராமேசன் வெற்றிலையை வாங்கி வரவே, சாப்பாடு முடிந்தது.

ஆனால் இராமேசன் மனது சாந்தமடைய வில்லை; பல எண்ணங்கள் அவன் மன அமைதியைக் குலைத்தன. "இவள் மனதினின்றும் நாம் ஸ்திரீ புருஷர்கள் என்ற எண்ணத்தை எவ்வாறு போக்குவது?" என்று யோசித்தான்.

கமலாவால் வேறு ஒருவருடைய உதவியுமின்றி வீட்டு வேலைகளைப் பார்க்க முடிந்தது. அவளுடைய சிற்றப்பன் வீட்டில் சமைத்து மற்ற வேலைகளையும்செய்து நன்கு பழகியிருந்தாள். அவள் தன் வேலைகளை சாமர்த்தியமாய் சுத்தமாய் சந்தோஷத்துடன்செய்து முடித்தது இராமேசனுக்கு ஆச்சரியமாகத் தோன்றி அவன் மனதைக் கவர்ந்தது. ஆனால் அதே சமயத்தில் பல எண்ணங்கள் எழுந்து அவன் மனதைப் புண்படுத்தின; இனி இருவரும் எப்படி நடந்து கொள்வது? அவளை தன்னுடன் வைத்துக் கொள்ளவும் கூடாது கைவிடவும் கூடாதே! அவளுடன் சேர்ந்து பிரதிதினம் பழகுவதில் எப்படி நடந்து கொள்வது? ஹேமநளினியும் கூட வந்திருந்தால் இந்த சங்கடங்களில் ஒன்றுமிராது. ஆனால் அதோ முடியாதாயிற்று; வேறு வழியொன்றும் தோன்றவுமில்லை. சரி, இனி ஒளிப்பதில் பயனில்லை; கமலாவிடம் உண்மையை முழுவதும் சொல்லிவிட வேண்டும்.

—

"தமிழ் உலகு"

சென்னை மைலாப்பூரிலிருந்து ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன், எம்.ஏ. அவர்களால் வெளியிடப்பட்டு வரும் இவ்வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையைப்பற்றி நமது அபிப்பிராயத்தை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அநுமதி கொடுத்திருக்கிறார். அவருடைய புத்தகங்களின் உரிமையை வகித்து வரும் மாக்மிலன் கம்பெனியாரும் இதற்கிணங்கி இருக்கின்றனர். 'சித்திரா'வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. மொழி பெயர்ப்பில் மகாகவியின் ஆழ்ந்த கருத்து பின்னப்படாமலிருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. பக்கங்களும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல விஷயங்களைப்பற்றிய வியாசங்கள் வெளியாகின்றன. தாய்பாஷையை அபிவிருத்திசெய்வதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்பத்திரிகையை அன்னார் நடத்திவருவதால் தமிழ்நாட்டினர் இதனை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை நாம் கூறத்தேவையில்லை.

சுதேசமித்திரன், 16—8—1922

தேசானுகூலன்

இஃதொரு சிறந்த தமிழ்ப்பத்திரிகை. வாரம் இருமுறை பினாங்கினின்று தேசிய ராஜீயவிஷயங்களுடன் வெளிவருவது. இதன் அருமை பெருமை அவசியம் முதலியவற்றை வாங்கிப்படித்தறிந்து கொள்ள வேண்டுமன்றி எழுதவியலாது.

ஆசிரியர்,
வேலை, K. அருணசல தேவர்.

சந்தாவிபரம்

உள்ளூர் வெளியூர்கட்கு வருஷம் 1 க்கு றிங்கி S10—00 அல்லது ரூபாய் 15—0—0. 6 மீக்கு றிங்கி S 5—50 அல்லது ரூபாய் 8—0—0

மானேஜர்:
தேசானுகூலன்
பினாங்குஸ்திரீட், பினாங்கு

ஸமரஸ போதினீ.

இப்பெயர் புனைந்த தமிழ் வாரம் இருமுறைப் பத்திரிகை திங்கள் வியாழன்தோறும் தஞ்சையிலிருந்து வெளிவருகிறது. தமிழ் ஜில்லாக்களில் எங்கும் சுதந்தர தாகத்தை எழுப்பிச் சீக்கிரம் இந்தியர்கள் பூரண சுயஆட்சி பெறுவதற்கு நியாயமான கிளர்ச்சி செய்வதே இதன் முக்கிய நோக்கம். வகுப்பு, ஜாதி, மதம் முதலிய பேதங்களைக் குறைத்து ஜனஸமூகத்தை நிர்மாணிப்பது இதன் லக்ஷியமாகும். உள்நாடு வருஷசந்தா ரூ. 7. ஆறு மாதத்திற்கு ரூ. 4. வெளிநாடு வருஷசந்தா ரூ. 9. ஆறுமாதத்திற்கு ரூ. 5. தேசம், வகுப்பு முன்னேற்றத்தைக் கருதி எவ்விஷயமும் தைரியமாக எழுதப்படும்.

மானேஜர்,
ஸமரஸபோதினீ
தஞ்சாவூர்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams : "Adimoorthi" Benares.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்சள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	×25"	ரூ 2½	முதல்	ரூ	3	வரை
,, 2.	12 ,,	×27"	,, 4	,,		6	,,
,, 3.	16 ,,	×34"	,, 6	,,		9	,,
,, 4.	18 ,,	×36"	,, 8	,,		12	,,
,, 5.	20 ,,	×44"	,, 11	,,		13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: **'Shree'**

கதர் சேலைகள் முதலியன.

10	கஜம்	× 45"	ரூ 4½	முதல்	ரூ 6	வரை
9½	,,	× 40"	,, 3	,,	5	,,
3	,,	× 1½ கஜ	,, 2	,,	3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக்கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment. We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

Beautifully illustrated large descriptive catalogue free on application. (Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, POONA.

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராகச் சேர்ந்து நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ1000 பாலிஸிக்கு ரூ15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
Manager.

K. S. MUTHIAH & Co.,

Silk House, Benares City.

Branches **:—MADRAS & TINNEVELLY.**

எங்களிடம் சகல விதமான பட்டு பீதாம்பர புடவைகள், நாகரீகமான புதிய மாதிரி புடவைகள் (நவீன கலர்களில்) ரவிக்கை குட்டைகள், வெண்பட்டு தினுசுகள், நார்மடி தினுசுகள், ருத்திராக்ஷ மாலைகள், முதலிய சகல தினுசுகளும் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். உடனே எங்கள் கேட்லாக்கை தருவித்து பாருங்கள்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
சில்க் ஹவுஸ், காசி.

பிராஞ்சு:—தபாற் பெட்டி 99, சென்னை.
போன் 1216 சென்னை.